# மாவத்தகம பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 25 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாவத்தகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுகள் தொடர்பான செலவு ரூபா 227,901 தொகையினை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 120,848 இற்கான வழங்குனர்களை பதிவு செய்யும் கட்டணம் முற்கொடுப்பனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் ஆண்டிற்கான செலவுகள் என பதியப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது களஞ்சிய முற்பணம் என களஞ்சிய முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 92,115 இற்கான நிர்மாண வேலைப் பண்டங்களின் இருப்பு பெறுமதி திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை இருப்பு பண்டங்களின் பெறுமதி அப் பெறுமதியினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 3,000,000 இற்கான மூலதன உதவி மீண்டுவரும் வருமானத்தின் கீழும் குறிப்பிட்ட செலவுகள் மூலதனச் செலவுகளின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) நன்கொடை ஒன்றாகக சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 3,000,000 இற்கான நோய்காவு வண்டியின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் சட்டரீதியாக சபைக்கு உரித்தாக்கியும் இருக்கவில்லை.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

-------------------------------------------

சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கான குறிப்பிட்ட பங்களிப்புத் தொகையை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,482,517 ஆகக் காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதிகளின் கீழ் 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேடுகளின் இடையே ரூபா 7,304,776 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

-------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 39,784,296 ஆகும். அவற்றில் மொத்தமாக 11% என ரூபா 4,348,006 தொகையொன்று 03 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ஆ) பல வருடங்களுக்கு முன்னர் சபையின் நலன்புரி சங்கத்திற்குச் செலுத்தியிருந்த ரூபா 25,000 தொகை துணைச் சேவையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) கடன்பட்டோர் மீதியில் நீண்ட காலமாக காணப்படும் கொங்கிரீட் செயற்திட்டத்தின் மீதியாக ரூபா 343,516 மற்றும் பஸ் நிலையக் கட்டணம் ரூபா 54,940 வும் இதில் அடங்கியுள்ளது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 17,162,369 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 2,865,594 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,336,192 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 6,201,786 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த

செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 16,338,569 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 19,449,701 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 245,538 இற்கான பற்றாக்குறையாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 71,256,302 தொகையில் மொத்தமாக 86% என ரூபா 61,619,335 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 16,338,569 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு வழங்கியுள்ள பணம் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 68,390,708 தொகையில் மொத்தமாக 66% என ரூபா 45,447,891 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 80% ஆகிய ரூபா 36,586,598 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூலதனச் செலவு ஆகிய ரூபா 19,449,701 தொகையில் இது மொத்தமாக நூற்றிற்கு 29% ஆகிய ரூபா 5,673,419 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் மீதியான நூற்றிற்கு 71% ஆகிய ரூபா 13,776,282 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

2.3 வருமான நிருவாகம்

---

2.3.1 வீத வரி

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 3,828,086 ஆக காணப்பட்டதுடன் வருடாந்த பில் போடப்பட்டவை ரூபா 1,576,221 ஆகும். அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அரச நிறுவனங்களில் இருந்து ரூபா 218,110 தொகை வீத வரி அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.2 வாடகை

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 1,038,498 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 2007 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 425,090 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அம் மீதி தொடர்பான தகவல்களைப் பெற்றுஹஹ அதனை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 504,520 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,500,000 உம் காணப்பட்டது.

03. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 627,880 இற்கான வரியினை மீளாய்வாண்டு இறுதி வரை அனுப்பியிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய பங்களிப்புத் தொகை சபையினால் செலுத்தப்படாமையால் 2014 ஆண்டின் போது அந் நிதியத்திற்கு மிகை விதிப்பாக ரூபா 163,452 தொகையொன்று செலுத்தியுள்ளது.

(இ) இலக்கம் 4215263 இலக்கம் 4215466 மற்றும் இலக்கம் 5506 கொண்ட வங்கி நடைமுறை கணக்குகள் பல வருட காலமாக செயற்படாது காணப்பட்டதுடன் அக் கணக்குகளில் முறையே ரூபா 12,687 தொகை ரூபா 4,014 தொகை மற்றும் ரூபா 93,448 இற்கான மீதிகள் காணப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பொறித் தொகுதிச் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 17,292 தொகையும் நீர்ச் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 264,779 தொகையும் சேவையை விட்டுச் சென்றுள்ளவர் தொடர்பாக ரூபா 35,350 இன் நிலுவை கடன் மீதிகள் காணப்பட்டன.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகனக் கட்டுப்பாடு

(ஊ) மனித வள முகாமைத்துவம்